Registered as a News Paper in Ceylon

★ ★

விலை சதம் 15

போன்: 7199
பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

EELA NADU

தேசிய தினசரி

S-LON
P. V. C. பைப்புகளும்
இணைப்புகளும்
மலிவான விலையில்
கிடைக்குமிடம்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

மலர் 12 தை 24 ஜுஹஜ 10 (7—2—71) ஞாயிற்றுக்கிழமை இதழ் 357

# பூமியை நோக்கி விரைகிறது அப்பலோ-14!

ஹூஸ்டன், பெப். 7

அண்டவெளியில் சாகசப் பயணம் செய்து, அம்புலியில் 3-வது தடவையும் காலடி பதித்து, உலாவி, ஆராய்ச்சி பல நடாத்திய அமெரிக்க விண்வெளி வீரர்கள் இப்போது பூமியை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறார்கள்.

இன்று அதிகாலை 12-18க்கு அம்புலித் தரையிலிருந்து விண்வெளி வீரர்கள் அலென் ஷெப்பர்டையும், எட்கார்ட் மிச்சலையும் தாங்கிக்கொண்டு 'அண்டாரஸ்' என்ற நிலாவாகனம் கிளம்பியது.

அம்புலியை வட்டமிட்டுக்கொண்டிருந்த தாய்க்கப்பலான 'கிட்டிஹோக்'குடன் நிலாவாகனம் வெற்றிகரமாக இணைந்து கொண்டது. அம்புலியை வெற்றிகொண்ட தனது நண்பர்களுடன் தாய்க்கப்பலில் இருந்த வீரர் ஸ்ருவாட் ரூஸா சேர்ந்து கொண்டார்.

நிலாவாகனம் சந்திரத் தரையை விட்டுக்கிளம்பிய ஏழுநிமிடம் 12 வினாடிகளுக்கு பின்னர் சந்திரனைச்சுற்றிய பாதையில்செல்ல ஆரம்பித்தது: திட்டமிட்டபடி 7 நிமிடம் 12 வினாடிகளில் எரிபொருள் எரிந்துமுடிந்தது.

வீரர்கள் அலன் ஷெப்பர்ட்டும், மிச்சலும் ஹூஸ்டனிலுள்ள தரைக்கட்டுப்பாட்டு நிலையத்துடன் தொடர்புகொண்டு பேசியபடியே இருந்தார்கள். சந்திரனைச் சுற்றிய பாதையில் நிலாவாகனம் சென்றுகொண்டிருந்தபோது செங்குத்தாகச் சென்றபோது அதனை தரைக்கட்டுப்பாட்டு நிலையம் சரிசெய்தது.

தாய்கலத்துடன் விண்வெளிக்கலம் இணையும் நிகழ்ச்சி ஒரு முக்கிய கட்டமாக இருந்தது. ஆனாலும் இரு கலன்களும் வெற்றிகரமாக இணைந்து கொண்டு சந்திரனைச்சுற்றிய பாதையிலிருந்து இப்போது பூமியை நோக்கி அப்பலோ-14 விண்வெளிக்கலம் வேகமாக விரைந்துகொண்டிருக்கிறது.

## ஒன்று சேர்க்கும் முயற்சி; இன்று முதல் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழ்க்கட்சித் தலைவர்களை ஒன்றுசேர்க்கும் முதலாவது கூட்டம் இன்று பிற்பகல் வல்வெட்டித்துறையிலுள்ள வேம்படி என்ற இடத்தில் நடைபெறவிருக்கிறது

இக்கூட்டத்தில் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு எஸ் ஜே வி செல்வநாயகம், தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு ஜி ஜி பொன்னம்பலம் ஈழத்தமிழர் ஒற்றுமைமன்னனித் தலைவர் திரு வி சுந்தரலிங்கம், தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவர் திரு வ நவரத்தினம் ஆகியோர் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கிறது

தமிழ்க்கட்சித் தலைவர்களை ஒன்றுசேர்க்கும் முயற்சியில் கடந்த ஒருமாத காலமாக திரு ஏ ஆர் சபாரத்தினம், திரு எஸ் ஞானமூர்த்தி ஜே பி, திரு ஏ வி வேற்பிள்ளை ஆகியோர் ஈடுபட்டனர். தங்கள்முயற்சிவெற்றியளித்துள்ளதாகவும் சகல கட்சித் தலைவர்களும் ஒற்றுமைப்பட சம்மதம் தெரிவித்திருப்பதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இக்கூட்டத்தில் தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் எம் பிக்களும், சிறுபான்மைத்தமிழர் மகாசபைத் தலைவர் திரு எம் சி சுப்பிரமணியம், யாழ் நகரமேயர் திரு ரி எஸ் துரைராசா ஆகியோரும் கலந்து கொள்வார்களென்றும் அமைப்பாளர்கள் தெரிவித்தனர்

முன்னாள் யாழ் மேயர் திரு எஸ் நாகராசா தலைமையில் இக்கூட்டம் நடைபெறுமென்றும் தமிழரசுப்பொது செயலாளர் திரு ஏ அமிர்தலிங்கம், தமிழ்காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு எம் சிவசிதம்பரம் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்துகொள்வார்களென அமைப்பாளர் ஒருவர் தெரிவித்தார்

## மூச்சு வாங்கியது, விண்வெளி வீரர்களுக்கு!

சந்திரத் தரையிலுள்ள ஒரு ஏற்றத்தின் உச்சிவரை விண்வெளி வீரர்கள் ஏற இருந்தார்கள் ஆனால் இந்த முயற்சியை இவர்கள் இடையில் நிறுதிக்கொண்டார்கள் தரைக்கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்து கிடைத்த உத்தரவைத்தொடர்ந்து இவர்கள் ஏற்றத்தில் ஒருபகுதி வரை சென்று திரும்பினர்.

விண்வெளி வீரர்களுக்கு இக்கட்டத்தில்மூச்சுவாங்கத் தொடங்கியது. இவர்களது இதயத்துடிப்பு 180ஆக அதிகரித்திருந்தது. பயண ஆரம்பத்தின்போது இதயத்துடிப்பு 85, 90 ஆக இருந்தது.

ஏற்றத்திலிருந்து இறங்கிய போது, பாறைக்கல்லை விண்வெளிவீரர்கள் சேகரித்தனர். நீண்ட தூசிபடிந்த பகுதிகளிலும் மண்மாதிரியைச் சேகரித்துக்கொண்டதுடன், அப்பகுதிகளை படம் பிடித்துக்கொண்டனர். சந்திரத்தரையில் பல்வேறு ஆராய்ச்சிகளை நடாத்திய பின்னர் நிலாவாகனத்துக்குள் விண்வெளி வீரர்கள் நுழைந்துகொண்டனர்.

## எவருக்கும் காயமில்லை!

மொண்ட்ரியால், பெப் 6

123 பிரயாணிகளையும் 17 சிப்பந்திகளையும் ஏற்றிக்கொண்டுபுறப்பட்ட விமானமொன்று எஞ்சின் கோளாறினால் ஆபத்தான நிலையில் கீழிறங்கியது. அதன் முன் பகுதி சேதமடைந்தாலும் ஒருவரும் காயமடையாது தப்பினார்கள்.

## சமூக குறைபாடு ஒழிப்புச் சட்டம்: கூடிய அதிகாரம்!

### நகல்மசோதாவை மந்திரிசபைஏற்றது

கொழும்பு, சனி

சமூக குறைபாடு ஒழிப்புச்சட்டத்தை அமுல் நடாத்துவதற்கு கூடிய அதிகாரம் வழங்கப்படவிருக்கிறது.

இதற்கான நகல் மசோதாவை இன்று மந்திரி சபை ஏற்றுக்கொண்டது.

சமூக குறைபாடு ஒழிப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதற்கான நகல் மசோதாவை நீதிஅமைச்சர் செனட்டர் ஜெயமானே சமர்ப்பித்தார்.

இந்தச் சட்டம் சம்பந்தமாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட மந்திரி சபை உபகுழுவின் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது.

சாதியின்பெயரால் நடாத்தப்படும் கொடுமைகளுக்கு கடுமையான தண்டனையும் பொலிஸாருக்கு கூடிய அதிகாரமும் வழங்கக்கூடிய வகையில் சமூக குறைபாடு ஒழிப்புச்சட்டம் திருத்தியமைக்கப்படவுள்ளது. நீதியமைச்சர் இன்று சமர்ப்

(6-ம் பக்கம் பார்க்க)

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, ஞாயிறு

நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர்சபையின் சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
16 L 0800 ரூ 92,530

இரண்டாவது பரிசு
13 D 0053 ரூ. 37,012

மூன்றாவது பரிசு
01 A 0871 ரூ. 9. 253

தலா ரூபா 4,462-65சதம் பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| | | 18 H 0807 | 37 Z 0099 |
| | | 37 H 0539 | 33 R 0501 |
| | | 16 A 0599 | 12 M 0279 |
| | | 01 J 0073 | 19 O 0631 |
| | | 28 V 0090 | 20 S 0631 |
| | | 18 T 0987 | 32 N 0141 |
| | | 31 A 0529 | 21 J 0823 |
| | | 04 C 0508 | 05 M 0969 |
| | | 26 L 0963 | 01 O 0899 |
| | | 24 H 0146 | 10 E 0491 |
| | | 08 S 0882 | 22 V 0649 |
| | | 15 M 0869 | 07 F 0199 |
| | | 13 X 0038 | 24 E 0236 |
| | | 20 B 0406 | 35 U 0052 |
| 35 P 0338 | 17 K 0422 | 31 A 0818 | 11 X 0449 |
| 35 U 0736 | 28 U 0122 | 21 V 0334 | 24 S 0188 |
| 29 H 0283 | 35 x 0576 | 26 P 0295 | 29 E 0562 |
| 12 H 0272 | 02 x 0382 | 07 X 0489 | 11 N 0967 |
| 14 L 0255 | 27 P 0842 | 19 L 0718 | 01 D 0-92 |
| 01 M 0704 | 03 S 0488 | 14 T 0474 | 07 V 0145 |
| 29 Q 0398 | 31 N 0993 | 22 M 0138 | 22 A 0259 |
| 14 F 0592 | 34 W 01'9 | | |

(6-ம் பக்கம் பார்க்க)

## கார் விபத்தில் பிரதமரின் தம்பி படுகாயம்

கொழும்பு, சனி

பிரதமரின் தம்பி டாக்டர் சிவாலி ரத்வத்தை இன்று அதிகாலை கார்விபத்தில் சிக்கி படுகாயமுற்றார்.

வழமைபோல் காலிபேஸ் கடற்கரையில் உடற்பயிற்சி செய்துவிட்டுக் காரில் திரும்பிச் சென்றுகொண்டிருக்கையில் இந்த விபத்து ஏற்பட்டது. டாக்டர் சிவாலி ரத்வத்தையுடன் காரில் சென்ற டாக்டர் ரி டி எச் பெரேரா திரு சிறில் கார்டினர் ஆகியோரும் படுகாயமடைந்தனர் டாக்டர் பெரேராவே காரைச் செலுத்தினார். ஒரு லொறியுடன் இந்தக் கார் மோதி விபத்துக்குள்ளானது. (சி. பி, ஏ,)

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு
டொலர்
அலுமினியம்
ONE-DOLLAR

### மணிவாக்கு

மனிதன் நாணயமாக உழைத்து வாழ வேண்டியதே தர்மத்தின் அடிப்படையாகும். மந்திரத்தால் எதனையும் செய்துவிடமுயாது. எமக்கு வேண்டிய உணவைக்கூட நாமே உற்பத்தி செய்யவேண்டும்— ராஜேந்திரப் பிரசாத்

ஈழநாடு

[illegible] Jaffna Daily
Telegram "ELANADU" Jaffna
[illegible] Jaffna Telephone [illegible]

[illegible] சாதாரண வருடம் தை மாதம்
25-ம் திகதி (7-2-71)

## அரசின் கடமை

மிளகாய், வெங்காயம், பாசிப்பயறு போன்ற உணவுப் பொருள்களின் இறக்குமதியை முற்றாகத் தடை செய்துவிட்டு இங்கேயே இவற்றை உற்பத்தி செய்து சுயதேவையைப் பூர்த்தி செய்ய முயற்சி செய்யவேண்டும் என்றும் பாவனையாளர்களுக்கு வழங்குவதற்காக இவற்றை இறக்குமதி செய்து குறைந்த விலையில் விற்பனை செய்வதில் அர்த்தமில்லை என்றும் 'வாழ்க்கைச் செலவு' சம்பந்தமாக ஆராய்ந்த நிரந்தரக் காரியதரிசிகள் குழு தனது இடைக்கால அறிக்கையில் சிபார்சு செய்திருக்கிறது. கூட்டணி அரசாங்கம் ஆட்சிபீடத்துக்கு வந்ததும் குழுக்கள், கமிஷன்கள், உபகுழுக்கள் என பல்வேறு குழுக்கள் நியமிக்கப்பட்டன. ஒவ்வொன்றாக இப்போதுதான் அறிக்கைகள் சமர்ப்பிக்கத் தொடங்கியிருக்கின்றன. இந்த அரசாங்கம் மட்டுமல்ல எந்த அரசாங்கம் வந்தாலும் முன்னைய அரசாங்க காலத்தில் நடந்தது பற்றி ஆராய்வதற்காக குழுக்கள் உப குழுக்கள், கமிஷன்கள் நியமிக்கப்படுவதும் இவை தமது அறிக்கைகளில் முன்னைய ஆட்சி நிர்வாகம் சரிவர நடைபெறவில்லையென்று காட்டும் பொருட்டு 'ஊழல்கள்' என்று சிலவற்றைச் சுட்டிக்காட்டுவதும் நம்நாட்டில் சாதாரண நிகழ்ச்சிகளாகிவிட்டன. ஆனால் நாடு இவற்றுக்குரிய பயன் அடைந்ததாகவோ பயன்தரக்கூடிய சிபார்சுகள் செயற்படுத்தப்பட்டதாகவோ நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. தேர்தல் முடிந்து ஆட்சிபீடத்துக்கு வருவோர் முன்னைய ஆட்சியாளர் பற்றிக் குறைகூறுவது நல்நாட்டில் சாதாரணம். இப்படிக் குறைசொல்லுவதற்கு ஓர் ஆதாரமாக இக்குழுக்களும் கமிஷன்களும் பயன்படுத்தப்பட்டுவருகின்றனவென்று சொல்வதே பொருத்தம்.

ஆட்சி பீடத்திலமர்பவர்கள் மாறி மாறிக் குற்றம் சுமத்துவதால் மக்களின் பிரச்னைகள் தீர்மாட்டாது; நாடு முன்னேறவும் முடியாது.

ஆட்சிபீடத்தில் அமர்வது எப்படி என்பதும் அமர்ந்த பின் நாட்டின் பிரச்னைகளுக்கு யார் மீது பழி போடுவதென்பதுமல்ல பிரச்னை. வாழ்க்கைச் செலவு உயர்வு வேலையில்லாத்திண்டாட்டப் பிரச்னை குடியிருப்பு நெருக்கடி போன்ற அத்தியாவசியப் பிரச்னைகளுக்கு எப்படித் தீர்வுகாண்பதென்பது தான் முக்கியம்.

கூட்டணி அரசாங்கம் ஆட்சிபீடத்துக்கு வந்து எட்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டன. உப உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடும், இப்பொருள்களின் விலையும் அதிகரித்திருக்கிறதேயொழிய குறையவில்லை.

சோஷலிஸ அரசாங்கத்துக்கு எதிரான சக்திகள் தான இதற்குக் காரணமென்றும் அவைகளின் சதிச்செயல் காரணமாக அரசாங்கம் தனது முற்போக்குத் திட்டங்களைச் செயல்படுத்த முடியாதிருப்பதாகவும் எத்தனை நாட்களுக்குச் சொல்ல முடியும்? இந்தச் சக்திகளை முறியடிப்பதும் அரசாங்கத்தின் வேலைதானே என்று மக்கள் கேட்கத் தொடங்கமாட்டார்களா?

## கந்தையா நினைவு தினத்தில் அமைச்சர்கள் பங்குபற்றுவர்

உடுப்பிட்டி, சனி

கம்யூனிஸ்ட் மேதையும், முன்னாள் பருத்தித்துறை எம்.பி.யுமான அமரர் திரு. பொன். கந்தையா ஞாபகார்த்த தினம் எதிர்வரும் 8ந் திகதி நெல்லியடியில் உடுப்பிட்டித் தொகுதி கம்யூனிஸ்ட் வாலிப முன்னணியினால் கொண்டாடப்படவுள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பாளர் திரு பொன்.குமாரசாமி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா, கட்டிட நிர்மாண அமைச்சர் திரு. பீட்டர் கெனமன், திரு. பெர்னட் சொய்சா எம்.பி. கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர் டாக்டர் திரு எஸ். ஏ. விக்கிரமசிங்கா உட்பட ஐக்கிய முன்னணிப் பிரமுகர்கள் பலரும் கலந்துகொள்வர்.

அமரர் பொன்.கந்தையாவின் உருவப்படம் தாங்கிய ஊர்வலமும் இரு அமைச்சர்கள் தலைமையில் நடைபெறும்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசக் கிளையினரால் இம்மாதம் 7ந் திகதி கட்சிக் காரியாலயத்தில் பொன் கந்தையா ஞாபகார்த்ததினம் கொண்டாடப்படவிருக்கிறது.

·····

### இலங்கேஸ்வரன்

யாழ்ப்பாணம், சனி

வட்டுக்கோட்டை கலைமகள் கலைக் குழுவினரின் கொழும்புக்கிளையினர் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் நாளை 'இலங்கேஸ்வரன்' என்னும் நாடகத்தை நடத்தவிருக்கின்றனர். இந்தநாடகத்தை மாதனையூர் ரி. சச்சிதானந்தம் இயக்குகின்றார்.

······

சங்கானை, சனி

வவனியா மாவட்டக் கல்வி அதிகாரி திரு. வி நடராசா வித்தியாதிபதியாக பதவி உயர்வு பெற்றமையை பாராட்டும் விழாவொன்றை நடாத்த வவனியா மாவட்ட மகா வித்தியாலய அதிபர்கள் தீர்மானித்துள்ளார்கள்.

### சிறிலங்கா குடியரசு

# மதச் சார்பற்ற அரசாக அமைய வேண்டும்

1970-ம் ஆண்டு செப்டம்பர் 15-ம் திகதி சமர்ப்பித்த எங்கள் மகஜரில் கூறியவற்றை மீண்டும் இங்கு கூறவிரும்புகின்றோம். ஒரு நாடு தனது சமூக மாற்றத்துக்கும் வரவிருக்கும் அதன் நீண்ட எதிர்காலப் பெருமைக்கும் அடிப்படையாக உதவுவதற்கு ஒரு புதிய அரசியலமைப்பை அமைத்துக் கொள்ளத் தீர்மானிக்கும் போது அது ஒரு வரலாற்று முக்கியத்துவமுடையதாகும்.

கட்சி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களே ஓர் அரசியலமைப்புக் குழுவாகத் தம்மை அமைத்துக் கொண்டமையைக் கண்டு, அரசியல்யாப்பை அமைக்கும் வழிகாட்டுவிவாதங்களில் பரந்த தேசிய மக்கள் பங்குபற்றுவதற்கு ஒரு வாய்ப்பை அளிக்கக்கூடியதாக வரைவு அடிப்படைத் தீர்மானங்களைச் சுற்றறிக்கையாக அவர்கள் விட்டிடுத்தலையாம் சிறப்பாக வரவேற்கின்றோம். பிரதானமான விஷயங்கள் பற்றிய தீர்மானங்கள் பெரும்பான்மை வாக்குகளாலன்றி, ஏகோபித்த தீர்மானங்களாக நிறைவேற்றப் படின். எங்கள் புராதன சபைகளின் மரபுத் தன்மையோடு ஒத்திருப்பதோடு, அவ்வாறு அமைக்கப்படும் அரசியல்யாப்பு எல்லா வகுப்பாரதும் மனமுவந்த அங்கீகாரத்தைப் பெற்றுத் தேசிய ஒற்றுமையை இறுகப் பிணித்தற்கும் உதவும் என்பதை நாம் எடுத்துக் காட்டவிரும்புகிறோம்.

முதன் முதலாக 1970-ம் ஆண்டு செப்டம்பர் 15-ம் திகதி கூடிய தமிழ் மகாநாட்டைப் பற்றிச் சில சொல்ல விரும்புகிறோம். அது எமது நாட்டின் சரித்திரத்தில் ஒரு முக்கியமான முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைத்த மகாநாடாகும். ஏனெனில் செனேற்றர்கள் பல்வேறு அரசியற் கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்படப் பல தமிழ் தலைவர்களை ஒன்று சேர்த்துப் பதினொரு தீர்மானங்களையும் ஏகோபித்துத் தீர்மானிக்கவும் மகஜரை ஆதரிக்கவும் அம்மகாநாடு செய்யக்கூடியதாயிருந்தது. அதுமட்டுமல்ல, ஒற்றுமைப்பட்ட ஜனநாயக சோஷலிச இலங்கையில் தமிழ் மக்கள் தமது கலாசாரத்தையுடைய சாதியாராகவும் சம அந்தஸ்துள்ள பிரஜைகளாகவும் வாழ்வதற்குரிய ஸ்தானத்தைப் பெறுவதே இம்மகாநாட்டின் நோக்கமாகும்.

தமிழ் மக்களுக்கு ஒருபலமான கவரத்தக்க வேண்டுகோளை விடுவதே இம்மகாநாட்டின் நோக்கமாதலால் ஏகோபித்த தன்மையை அது உண்டாக்கக் கூடியதாயிருந்தது என்று எண்ணுகிறோம். பல வருடங்களாக தேசிய இயக்கத்தின் முன்னணியில் நின்று உழைத்த தமிழ்த் தலைவர்கள் தாம் ஸ்திரமாக ஆதரித்து வந்த சுதந்திரமான ஒற்றுமைப்பட்ட இலங்கையில் தமது இனம் பூரண சுயகருத்தை வெளிப்படுத்தக் கூடிய நிலையைப் பெறும் என்றும் கருதியிருந்தார்கள் என்பதையும் ஞாபகப்படுத்திக் கொள்ளுகின்றோம். இதே நோக்கத்தின் தொடர்ச்சியாகத்தான் தமிழ் மகாநாட்டின் 2-வது கூட்டமாகிய இதில் கூடியிருக்கும் நாம் இவற்றைஎமதருமைத் தாய் நாட்டின் ஆலய பீடத்தில் சமர்ப்பணஞ் செய்து இலங்கைப் பிரஜைகளின் பல்வேறு வகுப்புகளின் கருத்துக்களையும் சேர்க்கும் பொறுப்பையுடையவராகிய அரசியல் யாப்பு அலுவல்களுக்குரிய கௌரவ அமைச்சருக்கு அறிவிக்கிறோம்.

### புத்தமதம்

(தீர்மானம் 3)

ஸ்ரீலங்காக் குடியரசு இலங்கை மக்களின் மதங்களாகிய புத்தமதம், இந்துமதம், கிறிஸ்து மதம், இஸ்லாம் மதம் ஆகியவற்றிற்கு அவ்வவற்றிற்குரி சரியான இடங்களை அளித்து மதச் சார்பற்ற ஓர் அரசாக விளங்குமாயின், எங்கள் புராதன தர்மத்தின் விலைமதிக்கவொண்ணாப் பகுதியாகிய

#### கே. நேசையா

அற்புதமான சகிப்புத் தன்மைக்கு ஏற்றதாக அமையும்.

### அடிப்படை உரிமைகள்

(தீர்மானம் 5) புதிய சமுதாய அமைப்பின் இருதயஸ்தானத்தை அரசும் மக்களும் முன்னேறச் செய்ய உறுதி பூண வேண்டும். இது அடிப்படை உரிமைகள் அரசியல் கொள்கைகளைக் கொண்டு வழி நடத்தும் இலட்சியங்கள் ஆகியவற்றில் தங்கியிருக்கிறது. அடிப்படை உரிமை அத்தியாயமே ஒரு தேசிய இனத்தின் மேல்வரிச் சட்டமாக அமைந்து ஒருமனப்பட்ட தன்மையையளித்து மக்களை ஒற்றுமையாக்க புதிய இலட்சியங்களைக் கட்டாயமாக அடிப்படையாகக் கொள்ளவேண்டும். இந்த இலட்சியங்கள், ஒவ்வொரு தனிப்பட்டவரிடத்திலும் உள்ள பண்பை (தெய்வீகத்தை) அங்கீகரிக்கும் புராதன தர்மத்தையுடைய மக்களின் உள்ளங்களைக் கவரவேண்டும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, சுயநலத்துக்காகப் பிறரைச் சுரண்டாமை, அகிம்சை ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட ஒரு சமுதாயத்தை ஒப்புக்கொள்ளச் செய்யும். அத்தர்மத்தின் புதிய சமாதானத் தூதுவன் இத்தகைய சமுதாயத்துக்குச் ''சர்வோதய சமுதாயம்'' என்று பெயரிட்டிருக்கிறார். சாதனை போதனையினின்றுந்தவறி சாதி, இனம் என்னும் முரண்பாடுகள் ஏகாதிபத்தியக்காரரை அவற்றை தமது பிரித்தாளும் தந்திரத்துக்குப் பயன்படுத்துவதற்கு உதவியது உண்மையே. இங்கு வகுப்புவாதத்துக்கு மாற்று மருந்தாக இந்திய தேசிய இயக்கங்கள் கொண்டதை நாம் பாடமாகக் கொள்ளலாம். அரசியல் யாப்பில் பொறுப்பளிக்கும் நீதியான அடிப்படை உரிமைகளைச் சேர்த்துக்கொள்வதே அம்மாற்று மருந்தாகும். எம் போன்ற பாரம்பரியமான சமுதாயத்தில் மீற முடியாத உரிமைச் சட்டம் தனிப்பட்டவர்களையும் சிறுபான்மை வகுப்புகளையும் தான் நினைத்தபடி அரசு சட்ட முறையிலும் செயல் முறையிலும் செயல்புரிவதிலிருந்து காப்பது மட்டுமல்ல ஏனைய பிரஜைகள் அவர்களை ஓரமாக நடத்துவதிலிருந்துங் கூடக் காப்பாற்றும். அதுபோல் தேசிய ஒற்றுமைக்கும் சமுதாயப் புரட்சிக்கும் அச்சாணியாகும் ஓர் இன்றியமையாத அடிப்படையாகும்.

அரசியல் அமைப்பின் வரைவு அடிப்படைத் தீர்மானம் 5 சட்டம் முன்பு ஆட்கள் எல்லோருஞ் சமமானவர்கள். அத்துடன் அவர்கள் சட்டத்தின்மூலம் கிடைக்கும் சமமான பாதுகாப்புக்கு உரிமையுடையவர்கள் என்று கூறுகிறது. இதனோடு இதைப் பூரணப்படுத்தும் முறையில் சமயம், சாதி, மொழி, இனம், பால், பிறந்த இடம் என்பவற்றில் எதைக்கொண்டேனும் ஓரம் காட்டுவதும் தடை செய்யப்படவேண்டும். பல்வகைக் கலாச்சாரத்தில் வேரூன்றி நிற்கும் பலவகைத் தன்மையுடைய சமுதாயத்தில் இராணுவப் பற்றற்ற உரிமைகளும், அரசியல் உரிமைகளும் பொதுப் பிரஜைத் தன்மையில் தனிப்பட்டவர்களாகவே தனிப்பட்டவர்களுக்கு அளிக்கப்படவேண்டும் என்பதும் தமது சாகித்தியாரின் உறுப்பினர்களாகவல்ல அவ்வுரிமை அளிக்கப்படுவது என்பதும் தெளிவாக்கப்படவேண்டும்.

பருத்தித்துறை தொடக்கம் தெய்வேந்திர முனை வரை இந்தப் பெரிய இலங்கையில் சாதிவேற்றுமையென்னும் துர்நாற்றம் வீசிக்கொண்டு மனிதப் பண்புக்கு ஊறு விளைத்துக் கொண்டிருக்கும்போது சாதிவேற்றுமையையும் தீண்டாமையையும் நீக்குதற்குரிய விதி எதுவும் இத்தீர்மானத்தில் சேர்க்கப்படாமை பெருங்குறையாகும். பிரஜைகள் சட்டத்தின் நியாயமான வரைவுக்குட்பட்டுச் சொத்துக்களை வைத்திருக்கும் உரிமை அளிக்கப்படுதலைப் பற்றி ஒன்றும் பேசாமை இத்தீர்மானத்தின் மற்றொரு குறையாகும். சர்வ இலவசக் கல்விமுறை வரை முன்னேறியுள்ள இந்நாட்டில் ஒவ்வொரு பிரஜையும் கல்வியுரிமைபெற்று அதைப் பூரணப் படுத்துதற்குரிய பொறுப்பும் பாதுகாப்பும் இத்தீர்மானத்தில் இல்லாதிருத்தல் நூதனமாக இருக்கின்றது. ஏனெனில் இப்போதுள்ள கல்விவிதிகள் கல்வியின் நோக்கத்தை வரையறுத்துக் கூறி அதைக் கட்டாய கல்வியாக்கி நடத்துதலை அரசே மேற்கொள்வதாகிய இக்காலக் கல்விச் சட்ட விதிகளைச் சேர்த்துக் கொள்ளவில்லை.

இவை இல்லாமல் இருப்பது மட்டுமல்ல. தனிப்பட்ட பிரஜையின் உரிமைகள், வகுப்புக்களின் சமூக. கலாசார உரிமைகள் ஆகியவை சரியானபடி தெளிவாகக் கையாளப் பெறுதவிடத்து சமத்துவம் என்ற கருத்து தனது நம்பகரமான நிலைபேற்றை இழக்கிறது. இத்தொடர்பில், அடிப்படைத் தீர்மானங்களல் மொழி பற்றிய தீர்மானங்கள் முழுதும் மாற்றிப் பரிசிலனை செய்யப்படவேண்டும். அவ்வாறே இப்போதுள்ள மொழிச்சட்டத்தின் விதிகளும் பரிசிலனை செய்யப்படவேண்டும். சட்டத்தின்

(6-ம் பக்கம் பார்க்க)

# நஷ்டஈடு கொடுப்பதற்கு பாக். தயாராய் இல்லை

## தூதரகம் தாக்கப்பட்டதற்கு யாஹ்யாகான் கண்டனம்

## கடத்தல் காரர்களை திருப்பி அனுப்ப இந்தியா கோரிக்கை

புதுடில்லி, பெப். 6

**விமானக்கடத்தல்காரர் இருவரையும் இந்தியாவில் விசாரணைசெய்வதற்கு திருப்பித்தருமாறு இந்திய அரசாங்கம் பாகிஸ்தான அரசைக் கோரியுள்ளது.**

*சர்வதேச விமானப் போக்குவரத்துச் சேசைவசங்கம் விமானக் கடத்தல்காரர் இருவர் மீதும் வழக்குத் தொடருமாறு பாகிஸ்தானிடம் கோரியுள்ளது.*

*இத்தவிதமான காட்டுமிராண்டித் தனத்தைத் தூண்டிவிடும் காஷ்மீர் விடுதலை முன்னணித் தலைவரைக் கைதுசெய்யவேடுண்மென ஹங்காங் ஸ்ராண்டேர்ட் என்னும் பத்திரிகை எழுதியுள்ளது.*

*இந்தியாவிலுள்ள பாக். தூதரகத்திற்முன் இந்தியர் அநாகரிகமான முறையில் ஆர்ப்பாட்டம் செய்து தூதரகத்திற்கு சேதம் விளைவித்திருப்பதோடு தூதரக ஊழியர்களுக்கு துன்பமும் விளைவிப்பதாக பாகிஸ்தான் ஜனாதிபதி யாஹ்யாகான் தெரிவித்துள்ளார்.*

சில நாட்களுக்கு முன்பாக இந்திய விமானத்தை வழிமறித்துத் திசை திருப்பி லாகூரில் இறக்கிய இரு காஷ்மீர் விமானக் கடத்தல் காரர்களை இந்தியாவில் விசாரிப்பதற்கு திருப்பித் தருமாறு பாகிஸ்தானுக்கு அனுப்பி வைத்துள்ள குறிப்பொன்றில் இந்தியா கோரியுள்ளது.

இந்த விமானக் கடத்தல் பற்றியும், பாகிஸ்தானின் உடந்தை பற்றியும் செய்திகள் அடங்கிய குறிப்பொன்றை ஐ. நா. வுக்கான பாரதத் தூதர் திரு. சமர்சென் ஐ. நா. பொதுக் காரியதரிசி ஊதாண்டிடம் கொடுத்தார். இந்தியாவிலிருந்து விமானத்தைக் கடத்திச் செல்வதற்கும், விமானத்தை வெடிவைத்துத் தகர்ப்பதற்கும் பாகிஸ்தான் அதிகாரிகள் உடந்தையாக இருந்திருக்கின்றனர். விமானத்தை இந்தியாவிற்குத் திருப்பி அனுப்புவதற்கு விரைவான நடவடிக்கை எடுத்திருந்தால் விமானத்தை அழிவிலிருந்து காப்பாற்றி இருக்கமுடியும் எனவே விமானக்கடத்தலுக்கும், அழிவிற்கும் பாகிஸ்தானே பொறுப்பை ஏற்கவேண்டும் என அக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய விமானத்தைக் கடத்திய இரு நபர்கள் மீதும் பாகிஸ்தான் அரசாங்கம் வழக்குத் தொடரவேண் மெனவும், அவர்களுடைய குற்றத்திற்குரிய தண்டனையை அவர்களுக்கு அளிக்க வேண்டுமெனவும் சர்வதேச விமானப்போக்குவரத்துச்சேவையின் தலைமையகம் பாகிஸ்தான் அரசைக் கோரியுள்ளது.

விமானக் கடத்தல் பற்றியும், விமானம் தகர்க்கப்பட்டவிதம் பற்றியும் சர்வதேச விமானச் சேவையின் பாகிஸ்தான் கிளை தலைமையகத்திற்கு மூன்றுநாட்களுக்கு முன்பு அறிக்கை ஒன்றை அனுப்பிவைத்திருந்தது.

பாகிஸ்தான் நடத்தைக்குக் கண்டனம் தெவிப்பதற்கு இந்தியர்களுக்குஉரிமையுண்டு ஆனால் அது வரம்பு மீறிச்செல்லக்கூடாது மாணவர்கள் நிதானமாகவும் கண்ணியத்துடனும் தங்கள் எதிர்ப்பைக் காட்டவேண்டுமென டில்லி மாணவி ஆசிரிய தலைவர்கள் கூட்டாக விடுத்த அறிக்கையில் மக்களையும் மாணவர்களையும் கேட்டுக்கொண்டுள்ளனர். டில்லி பல்கலைக்கழக ஆசிரியர்களும், டில்லி மாணவர் சபைத் தலைவர்களும் நேற்றுக்கூடி நிலைமையை ஆராய்ந்த பின்பே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதே நேரத்தில் கடந்த மூன்று நாட்களாக ஆர்ப்பாட்டம் செய்யப்பட்ட சண்டிகார் பகுதியில்இன்று போக்குவிரத்து மூடப்பட்டுள்ளது.

மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தபொழுது அவர்களைக் கலைக்கப் பொலிசார் கண்ணீர்ப்புகைஇறுதடிப்பிரயோகம் நடத்தியஇவ்பொலிசார் உட்பட 200 பேருக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். 3 பொலிஸ் வண்டிகள் எரிக்கப்பட்டன. இரு பாகிஸ்தான் தூதரக அதிகாரிகள் ஆபத்தான காயங்களுக்குள்ளானதாக பாக். அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாக். தூதரகத்திற்குமுன்பாக ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டாமென பொதுமக்களையும் பொது ஸ்தாபனங்களையும் இந்திய அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. இந்தவிமானக்கடத்தல்சர்வதேச விமானப்போக்குவரத்திற்கு ஒரு சவாலாகும். இந்த விமானக் கடத்தல் காரர்கள் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டுமென ஹாங்காங் பத்திரிகையான ஹாங்கொங் ஸ்ராண்டேட் தனது தலையங்கத்தில் எழுதியுள்ளது அது மேலும் தெரிவிப்பதாவது;- இந்த விமானக் கடத்தலுக்கும், அழிவிற்கும் பின்னணியில் இயங்கிக்கொண்டிருக்கும் காஷ்மீர் விடுதலை முன்னணித் தலைவரைக்கைது செய்யவேண்டுமெனத் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் மேற்குப் பாகிஸ்தானிலுள்ள இஸ்லாமாபாத்தில் மாணவர்ஆர்ப்பாட்டத்தின்போது இரு பொலிசார் உட்பட நால்வர் படுகாயமடைந்துள்ளனர். இவ்வார்ப்பாட்டம்இந்தியாவுக்கு எதிராகச் செய்யப்பட்டது

இந்திய விமானக்கடத்தலால் எழுந்துள்ள நிலைமை பற்றியும் மற்றும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையேயுள்ள நிலைமைபற்றியும் பாகிஸ்தான் ஜனாதிபதி யாஹ்யாகான் வானொலி மூலம் செய்தியொன்றை விடுத்தார்.

லாகூரில் இறக்கப்பட்ட கடத்தல் விமானத்தை பாதுகாப்பதற்கு வேண்டிய ஒவ்வொரு நடவடிக்கையையும் பாக் அரசாங்கம்எடுத்ததாக அவர் தனது செய்தியில் தெரிவித்தார்.

மேலும் அச்செய்தியில், இரு காஷ்மீரர்களினால்கடத்தப்பட்டு, அழிக்கப்பட்ட விமானத்துக்கான நஷ்ட ஈட்டை இந்தியா கோருகிறது. இந்தியாவினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பிரதேசத்தை சேர்ந்தவர்கள் விமானத்தை அழித்ததற்காக பாகிஸ்தான் நஷ்டஈடு கொடுக்க முடியாது. இந்தப் பிரச்னைகளால் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையேயுள்ள உறவில் மேலும் பிரச்னைகள் இறுக்கமடைந்துள்ளன. இந்தியா மீது பாக் விமானங்கள் பறக்கக் கூடாதென்ற இந்தியாவின் தடை உத்தரவால் பாகிஸ்தான் மக்களுக்கு சில வசதியீனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கடந்த ஓரிரு நாட்களாக புதுடில்லியிலுள்ள எமது தூதரகத்தின் முன் இந்திய மாணவர்கள் ஆர்ப்பாட்டஞ் செய்து தூதரகத்திற்குச் சேதம் விளைவித்ததோடு ஊழியர்களுக்கும் காயம்விளைவித்துள்ளனர். இரு தூதரக உயர்தர அதிகாரிகள்படுகாயம் அடைந்துள்ளனர். தூதரகத்தைச்சுற்றிப் பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது தூதரக சேதத்திற்கு இந்திய அரசாங்கம் நஷ்டஈடு அளிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

### பூட்டோ பாராட்டு

விமானக்கடத்தலையும் அந்த விமானத்தை அழித்ததையும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும் மேற்கு பாகிஸ்தான் மக்கள் கட்சித்தலைவருமான திரு அலி பூட்டோ வெகுவாகப் பாராட்டி விமானக் கடத்தல்காரர் இருவரையும் வீரர்கள் என அவர் புகழ்ந்தார் கடந்த தேர்தலில் பாகிஸ்தான் தேசிய சட்டசபையில்

(4-ம் பக்கம் பார்க்க)

## மிச்சல் உடையில் ஓட்டை

### அதிகாரிபொருள் செலவாகிவிட்டது.

ஹூஸ்டன், பெப். 6

அம்புலியின் மேல்பரப்பில் தம் வாகனத்தைப் பத்திரமாக இறக்கி, தாமும் அதன் மண்ணில் காலடி பதித்து நடமாடித் திரிந்த விஞ்ஞான சாதனங்களைப் பொருத்தி மாதிரிகளையும் பொறுக்கிக்கொண்டு எல்லாமே 'பிரமாதம்' என்று பூமிக்குத் தகவல் அனுப்பிவிட்டு கலத்துக்குத் திரும்புகையில் வீரர்கள் அலன் ஷெப்பர்டுக்கும் எட்வார்ட் மிச்சலுக்கும் தரைக்கட்டுப்பாட்டதிகாரிகளிடமிருந்து கிடைத்த செய்தி மிகவும் கசப்பானதாகவிருந்தது.

மிச்சல் அணிந்திருந்த விண்வெளி உடையில் விரிசல் ஏற்பட்டிருக்கின்றது என்பதே அந்தக் கசப்பான செய்தி.

இந்த விரிசலின் காரணமாக மிச்சலின் உடலில் பொருத்தப்பட்டிருந்த பிராண வாயுக்கூண்டிலிருந்து அதிகமான வாயு வெளியேறிவிட்டிருந்தது. இது ஷெப்பார்டின் கூண்டிலிருந்து செலவான வாயுவை விட இரண்டு மடங்கு அதிகமென்று தெரிவிக்கப்பட்டது

இந்த நிலைமை காரணமாகஇன்று பிற்பகலில் வீரர்கள் இருவரும் மீண்டும் சந்திரத்தரையில் இறங்கி நடமாடவேண்டிய நேரம் குறைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

முன்னதாக சந்திரக்கலமான அன்டாரஸ் தரையில் இறங்குவதில் சிறிது சங்கடம் ஏற்பட்டது. கரடுமுரடான பகுதியில் இறங்க வேண்டியிருந்தது என்பது ஒருபுறமிருக்க, கலத்தைச் செலுத்த விசை பிழைப்பட்டதே முக்கிய பிரச்னையாகவிருந்தது. இதனால் வீரர்கள் சற்று கலக்கமடைந்தார்கள். இந்த விசை தானாகவே இயங்கி சந்திரனை நோக்கிக் கலத்தைச் செலுத்தியிருக்க வேண்டும். அது இயங்குவதில் சங்கடம் ஏற்படுமென்று தெரிந்தாலும் கம்பியூட்டர் கருவிகள் எல்லாம் அந்தப்பணிக்குத் தயாராகவே இருந்தன இந்த நிலைமையில் ஹூஸ்டன் அதிகாரிகள் பலவேறு யோசனைகளை வீரர்களுக்குத் தெரிவித்து பிரச்னையைச் சமாளித்தனர்

கலம் சந்திரத்தரையில் சரியாக 2 48 மணி (இலங்கை நேரம்) க்குப் பத்திரமாக இறங்கியதும் 'நாங்கள் தரையில் இருக்கிறோம் தரை இறங்குவது நல்லபடியாக முடிந்தது' என்று மிச்சல் அறிவித்தார்

கலத்திலிருந்து ஷெப்பார்ட் முதலில் வெளியில் வந்தார். சுமார் ஆறு நிமிடங்கள் கழித்து மிச்சல் இறங்கினார். மிச்சல் வந்ததும் அவசரமாக சந்திர மண் மாதிரிகள் சிலவற்றை எடுத்துப்போட்டுக்கொண்டார் ஏதாவது சங்கடம் ஏற்பட்டு முன் கூட்டியே வெளிக்கிட நேர்ந்தால் மண் மாதிரிகளைச் சேர்ப்பது சங்கடமாகிவிடும் என்பதால் இவ்வாறு முன் கூட்டியே சிறிதளவு மண்ணை எடுத்து வைத்துக்கொண்டார் அவர்.

சந்திர மண் மிகவும் மெதுவாகவும் தூசாகவுமிருக்கிறது. காலை வைத்தால் புழுதிக்குள் பதிந்துவிடுகிறதென்று ஷெப்பார்ட் கூறினார்.

இருவரும் விஞ்ஞான சாதனங்களை விரைவாகவும் சாதுரியமாகவும் பொருத்தினார்கள். மிச்சல் ஒரு சாதனத்தின் மூலம் சில வெடிகளைத் தீர்த்தார். இதன் அதிர்வுகள் ஏற்கனவே பொருத்தப்பட்ட கருவிகள் மூலம் பூமிக்கு அனுப்பப்பட்டன. இந்த வெடித்தீர்ப்புக்கான கருவியை அவர்கள் முன்னதாகவே பொருத்தியிருந்தார்கள்.

கலத்திலிருந்து இரு சில்லு வண்டியொன்றை சந்திரத்தரையில் ஷெப்பர்ட் இழுத்துச் சென்றார். அதன்பக்கவாட்டில் தொங்கும் பைகளில் மண்மாதிரிகளை அவர்கள் பொறுக்கிப் போட்டுக்கொண்டனர்.

சந்திரனின் மேற்பரப்பில் தங்கள் கண்களுக்குத் தெரியும் பகுதிகளையும், காட்சிகளையும் அவர்கள் தம்மால் முடிந்தவரையில் விஞ்ஞானிகளுக்கு வர்ணித்துக் கூறினர்கள். பின்னர் முக்கியமான பகுதிகளைப் படம்பிடித்தார்கள். மிச்சல் சந்திரக்கலத்திலிருந்து இறங்கிய காட்சியை ஷெப்பர்ட் வண்ண டெலிவிஷன் காட்சியில் பூமிக்குக் காட்டினர்.

இரு வீரர்களும் தமது முதற்கட்டப் பணிகளைச் சந்திரத் தரையில் முடித்துக்கொண்டு கலத்துக்குத்திரும்பிய பின் ஓய்வெடுத்துக்கொள்ளத் தொடங்கினார்கள்.

### லூனகோட்-1

சந்திர மண்ணில் அமெரிக்க மனிதர்கள் இருவரும் இறங்கி தமது ஆய்வுகளை நடத்திக்கொண்டிருக்கும் அதே வேளையில் சந்திரனின் இன்னொரு பகுதியில் சோவியத் விஞ்ஞானிகள் அனுப்பிய 'லூனகோட்-1' கலம் தானே இயங்கி பூமிக்குத் தகவல்களை அனுப்புவதற்கு ஆயத்தம் செய்துகொண்டிருந்தது.

நிலவின் இரவுக்காலத்தில் முடங்கிக் கிடப்பதும் பகல்காலத்தில் வேலைசெய்வதுமாக கிட்டத்தட்ட மூன்று மாதங்களை அங்கு இக்கலம் கழித்துவிட்டது இன்று அது மீண்டும் பூமிக்குத் தகவல்களை அனுப்புமென்று எதிர்பார்க்கப்பட்டது.

# "தமிழ் இனத்துக்குத் தவறு இழைக்காதீர்"

## த. கா. எம். பி. க்களுக்கு

## தமிழரசுத் தலைவர் கோரிக்கை

நல்லூர், சனி

1932ம் ஆண்டு டொனமூர் அரசியற்திட்டம் நிறைவேற்றப்படுவதற்குக்காரணமாக இருந்தது கிழக்கிலங்கையைச்சேர்ந்த ஒருவருடைய வாக்குத்தான் இத்திட்டத்தினுல் நாம் பலதுன்பங்களுக்கும் ஆளானேம். அதனை நினைவிற் கொண்டாவது தமிழ்க் காங்கிரஸ் எம் பிக்கள் மூவரும் தமிழினத்துக்குத் தவறிழைக்கக்கூடாது. இதனையே தமிழ் மக்கள் விரும்புகிருர்கள்' இவ்வாறு தமிழரசுக் கட்சித் தலைவர் திரு எஸ் எம் இராசமாணிக்கம் தாவடியில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் பேசும் போது கூறினுர்.

தாவடிப் பிள்ளையார் கோவில் வீதியில் திரு சி த நடராசா தலைமையில்நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு இராசமாணிக்கம் மேலும் பேசியதாவது:-

இந்தநாட்டின் பெரும்பான்மைமக்கள் சிறுபான்மைமக்களை எப்படி நடத்தப்போகிருர்கள் என்பதனைப் புதிய அரசியல் திட்டம் தெளிவாக்கும் சிறுபான்மை மக்களின் பிரச்னைகளுக்குக் காணப்படும் தீர்வைப் பொறுத்தே இந்தநாட்டில் அமைதியும் நல்லுறவும் நிரந்தரமாக அமைய முடியும். சிங்கள மக்கள் தமக்குக்கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைப்பயன் படுத்த வேண்டும், வடக்கே அடிக்கடி விஜயம் மேற்கொள்ளும் அமைச்சர்கள் தமிழ் மக்களின் பிரச்னைகளான போதனமொழி நீதிமன்ற மொழி, தமிழ் மொழி விசேஷ விதிகள் சட்டஅமுல் போன்றவற்றில் தமது அரசு எப்படி நடந்து கொள்ளப் போகிறதென்பதைக் கூறுவதில்லை. இப்பிரச்னைகளை எப்படித் தீர்க்கலாமெனபதையும்அவர்கள்சொல்வதில்லை.

சிங்கப்பூரில் நடைபெற்ற சாம்ராஜ்யப் பிரதமர்கள் மகாநாட்டில் இலங்கைப் பிரதமர் திருமதி பண்டார நாயக்கா எந்தநாடும் தனது உள்நாட்டு நிர்வாகத்தில் சாதி சமய பேதம் காண்பிக்கக் கூடாதென்ற சாசனத்தில் கையெழுத்திட்டுள்ளார். அதில் கூறப்பட்டுள்ளகருத்துக்களை அமுல் நடத்துவாரென்று நம்புகிறேம்.

தமிழரசுக் கட்சிப் பொது செயலாளர் திரு அ அமிர்தலிங்கம் பேசும் போது 'சோஷலிஸத்திற்கு நாம் மதிப்புக் கொடுப்பவர்கள் அதனை நாம் விரும்புகின்றேம் நாம்பிற்போக்குவாதிகளென்று சிலர் சொல்லுகிறுர்கள். 1953ம் ஆண்டு யூ என் பி யின் அரிசி விலையை எதிர்த்துப் போராட்டம் நடத்தப்பட்டபோது நாம் அதில் பங்கு கொண்டோம். 1960ம் ஆண்டு மார்ச் மாதம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து ஐக்கியதேசியக் கட்சியை வீழ்த்திறேம். இவை எமது முற்போக்கு எண்ணங்களைப் பிரதிபலிக்க வில்லையா? உண்மையான சோஷலிஸம் இனத்திற்கு இனம் மதிப்புக் கொடுத்து வளர வேண்டும்.

நமது வருங்கால சந்ததியின் எதிர்காலத்தை உத்தேசித்தாவது தமிழர்கள் தமது பேதங்களை மறந்து தமக்கு பாதுகாப்புத் தேடவேண்டும் என்றுகூறினுர்.

ஊர்காவற்றுறை எம் பி கா பொ இரத்தினம், உடுவில் எம் பி வி தர்மலிங்கம், திரு மு ஆலாலசுந்தரம் ஆகியோரும் பேசினர்.

## கரவெட்டி பௌத்தபாடசாலை முன் சத்தியாக்கிரகம்

உடுப்பிட்டி, சனி

கரவெட்டி ஸ்ரீ நாரத தமிழ்ப்பௌத்த பாடசாலையில் தொடர்ந்து மூன்ருவது தினமாகச்சுமார் 300 மாணவர்களும், பெற்றேர்களும் பகிஷ்கரிப்பிலும், சத்தியாக்கிரகத்திலும் ஈடுபட்டுவருகின்றனர். இப்பௌத்த பாடசாலையில் கடந்த ஐந்து வருடங்களாகச் சம்பளமின்றிப் பணிபுரிந்து வந்த 15 ஆசிரியர்களில் 11 ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுப் பாரபட்சமான முறையில் அவ்வூரைச் சேர்ந்த நான்கு ஆசிரியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதே இப்பகிஷ்கரிப்பிற்கு காரணமென்று பெற்றேர்கள் கல்வி அமைச்சருக்கு அறிவித்துள்ளனர்.

நியமனம்பெற்ற 11 புதிய ஆசிரியர்களும், நியமனம் பெருத 4 ஆசிரியர்களும் அரசினரால் அனுப்பப்பட்ட பயிற்றப்பட்ட ஆசிரியர்களும், தலைமையாசிரியரும் வகுப்பறைகளில் பாடசாலை முடியும் நேரம்மட்டும் இருந்து வீடு திரும்புகின்றனர் பாடசாலை வாசலில் மாணவர்களும், பெற்றேர்களும் சத்தியாக்கிரகம் செய்துவருகின்றனர்.

இவ்விடயமாக அகில இலங்கைத் தமிழ்பௌத்த சங்கம் இம்மாதம் 9-ம்திகதி கல்வி மந்திரி ஜனுப் பதியுதீன் மஹ்மூத்தை சந்திக்கவிருக்கின்றது.

## பட்டம் பெறும் தொழிலாளர்

பேர்லின், பெப். 6

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் சோஷலிஸ்ட் நிறுவனங்களில் வேலை செய்யும் பாட்டாளிகளில் சுமார் 7 இலட்சம் பேர் பல்வேறு உயர்தர பரீட்சைகளுக்கான பாடத்திட்டங்களைப்பயின்று வருகின்றனர்.

1969-ல் இங்கு 21,000 தொழிலாளர்கள் மாலை வகுப்புகளிற் படித்து சிரேஷ்ட பரீட்சைகளுக்கு தோன்றினர். 9,600 பேர் பல்கலைக் கழகப் பிரவேசப் பரீட்சை எடுத்தனர்.

1969-ல் தொழிலாளர் 78,100 பேர் தொழில்நுட்ப பயிற்சி தராதரப் பத்திரம் பெறுவதற்கான விசேட வகுப்புகளிற்சேர்ந்து படித்தனர் இங்கு தொழிலாளர்களில் 13-ல் ஒருவர்வீதம்இவ்வாறு படித்துப் பட்டம் பெற்றவர்களாவர்.

## சுதந்திரதின விழாவில் தேசியத் தன்மை

பருத்தித்துறை, சனி

"முன்னெப் பொழுதும் இல்லாதவாறு ஏராளமான தமிழ்மக்கள் இலங்கையின் பல பாகங்களில் நடைபெறும் சுதந்திரதின விழாக்களில் பங்குபெறுவதைக் காணும்போது இந்த 23-ம் சுதந்திர விழாவே பெருமளவுக்குத் தேசியத்தன்மை பெற்றுள்ளமையை உணரலாம்."

இவ்வாறு நேற்றுமுன் தினம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சுதந்திரதின விழாக்கொண்டாட்டத்திற்கு தலைமை தாங்கிய கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். பாலேந்திரா கூறினுர்.

தொடர்ந்து அவர் பேசுகையில், தேசிய பொருளாதார அபிவிருத்தியும் இன ஒற்றுமையும் ஏற்பட வேண்டுமாயின் தேசாபிமான உணர்ச்சி மக்களிடையே ஏற்படவேண்டுமெனக்கூறினுர்.

......

சங்கானை, சனி

அகில இலங்கை இந்து மாமன்ற குருகுல பயிற்சி நிலைய கிளை ஒன்று சங்கானையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

## கட்டுப்பாட்டு பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படக் காரணம்

மாத்தறை, சனி

'கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க கூடிய விலைக்கு பொருட்களை விற்றுவரும் வியாபாரிகளை நாம் உன்னிப்பாகக் கவனித்து வருகிறேம். எம்மிடம் அகப்படுகிறவர்களை சட்டத்தின் கீழ் தண்டிக்க நாம் தயங்க மாட்டோம்' என்று வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு டி பி இலங்கரத்தின கூறினுர்.

மாத்தறையில் மக்கள் சந்தை ஒன்றை திறந்து வைத்துப்பேசுகையில் அமைச்சர் இவ்விதம் சொன்னுர் உதவிக் கல்வியமைச்சர் திரு பி வை துடாவை தலைமையில் வைபவம் நடைபெற்றது.

'வேண்டுமென்றே வியாபாரிகள் கட்டுப்பாட்டுப் பொருட்களைப் பதுக்கி வைத்து, தட்டுப்பாட்டை ஏற்படுத்துகிருர்கள். கொள்ளையடிப்பதற்காக இவ்விதசட்டவிரோத செயல்களில் ஈடுபடும் வியாபாரிகள் அகப்படுவார்களேயானுல் அவர்கள் சட்டத்தின் கையிலிருந்து தப்பமாட்டார்கள்' என்றும அமைச்சர் இலங்கரத்தின எச்சரிக்கையொன்றையும் விடுத்தார்.

— —

## புங்குடுதீவு கி.ச. தீர்மானம்

ஊரதீவு, சனி

"புதிய அரசாங்கம், உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்குகின்ற கடனுக்குரிய வட்டியை அதிகரித்தாலும் முன்னைய அரசாங்கத்தினுல் ஒதுக்கப்பட்ட பணத்தை எடுத்து புங்குடுதீவு குடிநீர் திட்டத்தை நிறைவேற்றி மக்களின் துயரத்தை நீக்க வேண்டும்" என்ற தீர்மானம்புங்குடுதீவுகிராமசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளது. தலைவரும், உபதலைவரும் கூட்டத்திற்கு வராத காரணத்தால், ஒன்பதாம் வட்டார உறுப்பினர் திரு.கே.நல்லதம்பியின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

## புதிய அரசியல் திட்டம்பற்றி கா. பொ. விளக்கம்

வேலணை, சனி

தற்பொழுது வெளியிடப்பட்டுள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படைத் தீர்மானங்கள், தமிழ் மக்களை இந்த நாட்டில் அடிமைகளாக ஆக்கும் அரசாங்கத்தின் போக்கினை நன்கு புலப்படுத்துகின்றது மொழி உரிமை, ஆட்சி உரிமை, குடி உரிமை முதலியன எல்லாவற்றையும் குழிதோண்டிப் புதைக்கும் முறையிலேயே இந்த அடிப்படைத் தீர்மானங்கள் அமைந்துள்ளன" என்று வேலணைத் தமிழரசுக்கட்சிக் கிளையின் பொதுக்கூட்டத்தில் பேசிய ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினுர்.

திரு. இரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது!

"இந்த அரசாங்கம் சிங்களத் தீவிரவாதிகளினுல் வழிநடத்தப்படுகிறதா? அன்றேல் சிங்களத் தீவிரவாதிகளின் கொள்கையைத்தான் தனதாகக் கொண்டுள்ளதா? என்பது அரசியல் அமைப்புச் சட்ட ஆக்கத்தை முற்றுகப் படித்தவர்களுக்குப் புலனுகும். தமிழ்மொழிப் பிரமாணங்களை எதிர்த்துப் பொலிஸ் துப்பாக்கிச் சூடுபட்டு இறந்த ரத்தினசாரதேரோவுக்கு அரசாங்கச் செலவில் நினைவுச் சின்னம் எழுப்பி, பிரதம அமைச்சரும், ஏனைய அமைச்சர்களும் அவரைத் தேசிய வீரன் எனப் பாராட்டியதும் நன்கு புலனுகிறது.

தமிழ் மொழிச் சட்டத்தை அரசியல் அமைப்புச் சட்டத்திலிருந்து நீக்க வேண்டுமென முன்னுள் பிரதம நீதியரசர் திரு. பசநாயக்கா போன்றவர்கள் கிளர்ச்சிசெய்யத் தொடங்கிவிட்டனர். இதற்காக ஓர் இயக்கத்தையும் ஆரம்பித்துள்ளனர். இச்சூழ்நிலையில் தமிழின் எதிர்காலம் பேரிரிழும், பேராபத்தும் நிறைந்ததாக உள்ளது. இவற்றைத் தமிழ் மக்கள் நன்கு உணரவேண்டும்" என்றுர்.

## 'கட்டாயப் படுத்தமாட்டோம்'

அளவெட்டி, சனி

அரசாங்கத்தின் கூட்டுறவுப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மல்லாகம் அளவெட்டி கிராமசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு எனப் புதிய ஆரம்ப சங்கமொன்று சென்ற புதன்கிழமை பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பொதுக் கூட்டம் அளவெட்டி அருணேதயாக் கல்லூரி மண்டபத்தில் காரியாலய பரிசோதகர் திரு. தி. முருகேசு தலைமையில் நடைபெற்றது.

திரு. முருகேசு தமது உரையில் 'புனரமைப்புத் திட்டத்தில் சேர மறுக்கும் சங்கங்களை நாங்கள் கட்டாயப் படுத்தப் போவதில்லை ஆனுல் புனரமைப்புச் செய்யப்பட்ட சங்கங்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் சேரமறுக்கும் சங்கங்களுக்கு வழங்கப்படமாட்டாது' என்று குறிப்பிட்டார்.

வலி-வடக்குப் பகுதியிலே முதலாவதாகப் பதியப்படும் இவ்வாரம்ப சங்கம் அளவெட்டி மல்லாகம் ப நோ, கூ. சங்கமெனப் பெயர் பெறும் இதற்கான வெளிக் கடன் எல்லையாக ரூபா 25,10,000 தீர்மானிக்கப்பட்டது. அளவெட்டிப் ப. நோ. கூ. சங்கத்தின் தலைவர் திரு. வ. பொன்னம்பலம் நன்றியுரை கூறினுர்.

—

## அமைச்சர் திறப்பார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பாஷையூர் மக்கள் முன்னேற்ற சனசமூக நிலைய ஆண்டுவிழாவில் தபால் அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இவ்விழா நாளை ஆரம்பமாகி தொடர்ந்து 9-ந் திகதிவரை நடைபெறவிருக்கிறது 9ந்திகதி இரவு தபால் அமைச்சர் திரு. குமாரசூரியர் கலந்துகொள்வார்.

இவ்விழாவில் மட்டக்களப்புத் தொகுதி இரண்டாவது எம். பி. திரு. ராஜன் செல்வநாயகமும், தென் பகுதி எம் பிக்கள் சிலரும் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

9-ந் திகதி தபால் அமைச்சர் பாஷையூர் உபதபால் கந்தோரைத் திறந்துவைப்பார். அன்று இரவு நடைபெறும் சனசமூக நிலைய ஆண்டுவிழாவில் அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா, திரு. அல்பிரட் துரையப்பா உட்படப் பலர் உரை நிகழ்த்துவார்கள்.



மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கடந்த 36 ஆண்டுகளாக ஆசிரியப் பணிபுரிந்த திருமதி கந்தையா அன்னபூரணம் அண்மையில் ஓய்வு பெற்றுர்: ஆசிரிய சேவையின் ஆரம்ப காலந்தொடக்கம் ஓய்வு பெறும் வரையும் இப்பாடசாலையிலேயே பணியாற்றி வந்த இவர் கல்வியின் முன்னேற்றத்திலும், சமய வளர்ச்சியிலும், சமூக முன்னேற்றத்திலும் பெரிதும் ஊக்கமும் ஆக்கமும்காட்டி வந்தவர்.

......

## மாணவர் சுற்றுலா

பருத்தித்துறை, சனி

வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர் இலங்கையின் பல பாகங்களையும் தரிசிக்கும் நோக்கமாக ஆசிரியர் திரு கே. ஆள்வாப்பிள்ளை தலைமையில் ஒரு சுற்றுலாவை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் முதல் கதிர்காமம் ஆலயத்தைத் தரிசித்த பின்னர் வாழைச்சேனை; கல்லோயா, புராதன நகரங்களான பொலநறுவை, அனுராதபுரம் ஆகிய இடங்களுக்கும் செல்வர்.

......

## திருத்தப்படுகிறது

அம்பன், சனி

இடிந்தும் பழுமுமாகக் காட்சியளித்த பருத்தித்துறை பஸ் நிலையம் தற்போது செப்பனிடப்படுகின்றது.

——

## நஷ்டஈடு ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பான்மைஇடங்களைக் கைப்பற்றிய முஸ்லிம் லீக்கின தலைவரான சேர் முஜிபர் ரஹ்மன் இவ்விமானக் கடத்தலை வெகுவாகக் கண்டித்தார்.

## பணிமனை விஸ்தரிப்பு

பாண்டிருப்பு, சனி

கரைவாகு வடக்கு கிராம மன்றப் பணிமனை விஸ்தரிப்பு வேலைகள் துரிதமாக மேற் கொள்ளப்படுகின்றன. கிராம மன்ற அங்கத்தவர் ஒருவர் இதுபற்றி கருத்து தெரிவிக்கையில், இதுவரை காலமும் மன்றப் பணிமனையில் நிலவி வந்த இடநெருக்கடி காரணமாக மக்கள் தேவைக்கேற்றவகையில்சில இயக்கங்கள் நடைபெறுமல் போயின என குறிப்பிட்டார்.


வெலிங்டன் சினிமா
கணிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
எம்.ஜி ஆர். - சாவித்திரி
நடித்த
வேட்டைக்காரன்

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
ஜெய்சங்கர் — பாரதி
நடித்த
காதல் பறவை

REGAL Jaffna
Daily 3 shows
Poya days 10-30 a. m.
James Bond 007
Sean Connery
in
YOU ONLY LIVE TWICE

RAJAH Jaffna
Daily 4 Shows
Giuliano Gemma
in
BLOW HOT, BLOW COLD
(Color - Adults)

ராணி சினிமா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேஷன் - ஜெயலலிதா
நடித்த
எங்கிருந்தோ வந்தாள்

வின்ஸர் - யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஏ.வி.எம். ராஜன் - வாணிஸ்ரீ
சிவகுமார் - குமாரிலட்சுமி - சோ
நடித்த
ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்
அன்னையும் பிதாவும்

4-வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (கொழும்பு)
சிவாஜி
காஞ்சனா
எம். என். நம்பியார்
நாகேஷ்
முத்துராமன்
இன்னும் பலர் நடித்த







சிவந்த மண்


## ஈழநாடு வெற்றிக்கிண்ணம் அளவெட்டி அண்ணுவுக்கு

மாவிட்டபுரம், சனி

16 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதல் இடம் பெற்று 'ஈழநாடு' வெற்றிக் கிண்ணத்தை அளவெட்டி அண்ணு விளையாட்டுக் கழகத்தை சேர்ந்த எஸ். மகேந்திரன் தட்டிக் கொண்டார்.

வலிவடக்கு காரியாதிகாரி பிரிவு விளையாட்டுச் சங்க ஆதரவில் வியாழக்கிழமை நடாத்தப்பட்ட இச் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் கடும் மழையில் நடைபெற்றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இருந்து ஆரம்பமான இப்போட்டி சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பளை, காங்கேசன்துறை, கீரிமலை, மாசியப்பிட்டி ஆகிய இடங்களுக்கு சென்று ஆரம்ப இடத்தை அடைந்தது.

சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டிகளின் முடிவுகள் பின்வருமாறு:

16 மைல் ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டம்: எஸ். மகேந்திரன் (அளவெட்டி அண்ணு விளையாட்டுக் கழகம்) எல். சரவணபவான் (இளம் தென்றல் சுன்னாகம்) ஐ. செல்வராசா (சங்குவேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம்)

10 மைல் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டம்: கனகேஸ்வரி (இளம் தென்றல் சுன்னாகம்) லில்லி மலர் (இளம் தென்றல் சுன்னாகம்)

10 மைல் ஆண்களுக்கான மரதன் ஓட்டம்: வி. ஆனந்தராசா (ஐக்கிய விளையாட்டுக் கழகம்) எஸ். ராசதுரை (நேதாஜி விளையாட்டுக் கழகம் சுன்னாகம்) எஸ். பாலச்சந்திரன் (அளவெட்டி அண்ணு கழகம்).

## வெற்றி

தாவடி, சனி

தாவடி ஸ்ரீகணேச விளையாட்டுக்கழகத்தினர்க்கும் கோண்டாவில் வேதபாராயண சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்தினருக்குமிடையே நடைபெற்ற சிநேக பூர்வமான உதைபந்தாட்டத்தில் கோண்டாவில் கழகம் 2-1 ஆட்டங்களால் தாவடி கழகத்தை வென்றது.


MANOHARA
Jaffna
Daily 4 Shows
Thomas Hunter
Henry Silva
in
The best Westrn of the Year





## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஞாயிறு 7-2-71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீ. அல்லது 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-30 கத்தோலிக்கநிகழ்ச்சி, 8-15 ஹஜ்பெருநாள் விசேஷ நிகழ்ச்சி, 8-20 பேச்சு, 8-30 அஞ்சல்.

344 மீ. அல்லது 49 மீ

9-30 கல்வியமைச்சரின் ஆசிச்செய்தி, 9-40 முஸ்லிம்நிகழ்ச்சி, 10-00 சித்திரம் — ஹஜ்யாத்திரை 10-30 சித்திரம், 10-45 சித்திரம், 11-15 இசைச் சித்திரம்.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அல்லது 61 மீ.

மாலை 4-30 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நாளையசந்ததி.

இரவு 6-15 வாத்தியஇசை, 6-30 நாட்டுப்பாடல்கள், 7-15 பாட்டு, 7-45 ஐ நா. சித்திரம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கதாப்பிரசங்கம், செய்தித் தொகுப்பு.

......

## 10-வது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

காந்தி கலைவளர்ச்சி மன்ற 10-வது ஆண்டு நிறைவு விழா இம் மாதம் 7-ம், 8-ம், 9-ம் திகதிகளில் தாவடி வேதவிநாயகர் ஆலய மேற்கு வீதியில் அமைந்த திறந்தவெளியரங்கில் நடைபெறவிருக்கிறது.

9-ம் திகதிய நிகழ்ச்சி கலைமணி சு. வடிவேலுவின் 25 வருடகலைச் சேவையைப் பாராட்டி நடைபெறுகிறது. திரு. பொ. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும் விழாவில் திரு. தேவன் ஆசிரியர், திரு. ஈ. கே குமாரயா, திரு. அ. அமிர்தலிங்கம், திரு. ச. முத்துலிங்கம் உட்படப் பலர் உரையாற்றுவர்.

— —

## சிறைத்தண்டனை

அல்லைப்பிட்டி, சனி

நெடுந்தீவு நடுக்குறிச்சியைச் சேர்ந்த எம். நிக்கலஸ் என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த திருமதி ஏ. அந்தோனியாபிள்ளை என்பவரின்வீட்டிற்கு கல் எறிந்து சேதப்படுத்தியதாககுற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கொலின் மென்டிஸ் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்ட போது எதிரிக்கு நீதவான் ஆறுமாத கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினர்.

... ...

## வங்கிக் கிளை திறக்கப்படும்

அல்லைப்பிட்டி, சனி

தீவுப்பகுதி மக்களின் நலனை முன்னிட்டு இம்மாத இறுதிக்குள் ஊர்காவற்றுறையில் இலங்கை வங்கிக் கிளையொன்று திறக்கப்படவிருக்கிறது. ஊர்காவற்றுறை சுங்கஇலாகா உத்தியோகஸ்தர்களுக்கான வீடு ஒன்றிலேயே இக்கிளை நிறுவப்படும்.

## வரிவிளம்பரம்

### தேவை

கடைச்சல் மிசின்களில் (Lathe And Milling Machines) வேலை செய்வதற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை. முன் வேலை செய்த ஸ்தாபனத்தின் நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும் எஸ் சுப்பிரமணியம் அன் கொம்பனி, 53, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம், 2804

யாழ்ப்பாணம் — பெருமாள் கோயிலுக்கு இரவு 12 மணி தொடக்கம் காலை 6 மணி வரை காவல் ஆள் தேவை. விண்ணப்பிக்கவும். மனேஜர், பெருமாள் கோயில். 2803

வீட்டில் சமையல் செய்யவும் பிள்ளைகளைப் பார்க்கவும் உதவி ஆள் தேவை. அநுபவம் வாய்ந்தவர்கள் விரும்பத்தக்கது. மனுச் செய்யவும், விளம்பர இல: 2805, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2805

### விற்பனைக்கு

கார்:

நல்ல நிலையிலுள்ள சி. என். ஏ. 40 கார் விற்பனைக்குண்டு. 71, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (பழைய தபாற்கந்தோர் சந்தி) 2807

### கல்வி

6-ம், 7-ம், 8-ம் வகுப்புக்களுக்கு எல்லாப் பாடங்களும் அரசினர் வழிகாட்டியைத் தழுவிப் படிப்பிக்கப்படுகின்றன தகைமையும் அனுபவமும் நிறைந்த ஆசிரியர்களால். விரும்பியோர் தொடர்பு கொள்ளவும்: 390 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2713

### மகா கும்பாபிஷேகம்

யாழ் திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் மகா கும்பாபிஷேகம் நாளை ஆரம்பமாகிறது. அன்னையின் தரிசனம் பெற்றுய்யுமாறு அடியார்களை அழைக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபையார்.

2763

## பாராட்டு விழா

புங்குடுதீவு சனி

புங்குடுதீவு ஸ்ரீ இராசராசேஸ்வரி வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி ஒய்வுபெறும் திரு. சி சின்னத்துரைக்கு இம்மாதம் 7-ம் திகதி மாலை பாடசாலை மண்டபத்தில் பாராட்டுபசாரம் அளிக்கப்படவிருக்கிறது. மேற்படி பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய, புதிய மாணவர் ஆகியோரால் நடத்தப்படும் இப்பாராட்டு விழாவில் பல பாடசாலைகளையும் சேர்ந்த ஆசிரியர்களும், திரு. கா.பொ, இரத்தினம் எம். பி. கிராமசபைத் தலைவர் திரு. கா. மதியாபரணம் உட்படப் பல பிரமுகர்களும் ஒய்வு பெறும் ஆசிரியரைப்பாராட்டிப் பேசுவர்.

—

## இடமாற்றம்

ஓமந்தை, சனி

மாதர் பணிக்கர் மகிழங்குளம் அரசினர் பாடசாலையில் ஆங்கில ஆசிரியையாகக் கடமையாற்றிய திருமதி வ மகேஸ்வரலிங்கம் இம்மாதம் முதல் சேமமடுக்குளப் படிவம்:1 அரசினர் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# பாடசாலைகள் 'ஜனதா கமிட்டி' கலைக்கப்பட்டது!

கோட்டை, சனி

பாடசாலைகள் கல்லூரிகளுக்கு மாணவர்களை அனுமதிப்பது சம்பந்தமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்பட்ட 'ஜனதா கமிட்டி' என்று சொல்லப்படும் மக்கள் குழுக்கள் கலைக்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த ஜனதாக் கமிட்டிகள் தவறான முறையில் செயல்பட்டு வந்திருப்பதாக புகார் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்ப்பதில் ஏற்பட்ட சிரமங்களை சமாளித்து நிவர்த்திசெய்யும் பொறுப்பு அந்தந்தப் பகுதி வித்தியாதிபர்களிடம் இப்போது ஒப்படைக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

ஜனதா கமிட்டிகள் இதுவரை ஆற்றியபணிகளுக்காக கல்வி அமைச்சு நன்றி தெரிவித்துள்ளது.

## கடற்படையினர் சுட்டதால் நடுக்கடலில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், ஞாயிறு

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இயந்திரப் படகை நோக்கிக் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் ஒருவர் பலியானார் என்றும், பிரேதத்தை படகில் சென்ற மற்ற நால்வரும் கடலில் வீசிவிட்டதாகவும் பொலிஸாருக்குத் தகவலொன்று கிடைத்துள்ளதாகத் தெரியவருகிறது. துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் இந்தியக் கடற்படையினரா அல்லது இலங்கைக் கடற்படையினரா என்பது பற்றிய தகவல் தெரியவில்லையாம்.

இத்தகவல் பற்றி உடனடியாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் உதவிப் பொலிஸ் அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை ஆதி கோவிலடியைச் சேர்ந்த சிவகுரு கந்தசாமி என்பவரே துப்பாக்கிக்குண்டுக்கு பலியான நபரென்ற தகவலும் பொலிசாருக்குக்கிடைத்துள்ளதாகத் தெரியவருகிறது கடற்படையினர் சாமான்களுடன் கடலில் காணப்பட்ட படகை தடுத்துநிறுத்துவதற்கு துப்பாக்கிப்பிரயோகம் செய்திருக்கலாம் எனப் பொலிசார் சந்தேகிக்கின்றனர்

இச்சம்பவம் நேற்றுமுன்தினமிரவு நடைபெற்றதாகவும் சிறிது சேதமடைந்த படகு பழுதுபார்க்கப்பட்டிருப்பதாகவும் சந்தேக நபர்கள் நால்வரும் தலைமறைவாக இருப்பதாகவும் பொலிசாருக்குத் தகவல் கிடைத்துள்ளதாம்

பலியானவரின் உறவினருக்கு படகில் சென்றவர்கள் நஷ்டஈடு கொடுக்க முயற்சி எடுத்து வருவதாகவும் ஒரு தகவல் பொலிசாருக்கு கிடைத்துள்ளதாம்

பொலிசார் இச்சம்பவம் பற்றித்தீவிரமாக விசாரணை செய்து வருகின்றார்கள் பலியானதாகக் கூறப்படும் சிவகுரு கந்தசாமி பற்றியும் படகில் காணப்பட்ட சாமான்கள் பற்றியும் சந்தேக நபர்கள் பற்றியும் பொலிசார்விசாரணைசெய்து வருகின்றனர்.

## மதச்சார்பற்ற ...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்பு எல்லாப் பிரஜைகளும் சமமானவர்களாதலாலும் அரசால் சமமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய உரிமையுடையவர்களாதலாலும் அவர்கள் தங்கள் மொழியில் சமமான கல்விச்சாலைகளில் சேர்வதற்கும் அரசாங்க உத்தியோகங்களில் சம உரிமைபெற உரிமையுடையவர்களாதலாலும் மற்றப் பிரஜைகளுக்கு இல்லாத தடை எதுவும் அவர்கள்மீது சுமத்தப்படக் கூடாததாலும் மற்றப் பிரஜைகள் அநுபவிக்கும் சிலாக்கியங்களெதுவும் அவர்களுக்கு மறுக்கப்படக்கூடாததாலும் சிங்களம்பேசும் பிரஜைகளுக்குச் சிங்கள மொழி எப்படியோ அப்படியே தமிழ்ப்பேசும் மக்களுக்குத் தமிழ்மொழி இருத்தல் வேண்டும் என்ற நிச்சயமான அடிப்படையில் சட்டம் மாற்றியமைக்கப் படவேண்டும்.

5 (X) தீர்மானம், அரசியல் யாப்பில் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை விசாலமான முறையில் மட்டுப்படுத்த இடம் அளிக்கிறது. ஆகவே ஒரு கையாற் கொடுத்ததை அது மறுகையால் எடுத்துக்கொள்கிறது. இந்நிலையில் ஒருநாள் நாம் திடீரென ஒருபொலிஸ் அரசின்கீழ் வந்துவிடலாம். அரசின் பாதுகாப்பைப் பாதிக்கும் என்றுகண்டால் உதாரணமாக, போர்க்காலங்களில் அல்லது உள்நாட்டுக் கலகக்காலங்களில் நீதிமன்றங்களின் சட்டத்தின் உறுதியைப் பரிசோதிக்கக் கூடிய காலங்களில் இந்த அடிப்படைத் தீர்மானங்களை நியாயமான அளவுக்கு மட்டுப்படுத்துதல் வேறு.

(தொடரும்)

## விருந்துபசாரம்

யாழ்ப்பாணம், சனி

இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தனுக்கு இம்மாதம் 8-ம் திகதி பிற்பகல் கரும்பசிட்டி சன்மார்க்க சபை தேநீர் விருந்தும் பாராட்டும் அளிக்க விருக்கிறது. சன்மார்க்க நாடக மன்றத் தலைவர் திரு. ஏ. ரி. பொன்னுத்துரை இவ்வைபவத்திற்குத் தலைமை வகிப்பார்.

திரு. கே. நேசையா கலையரசு சொர்ணலிங்கம் மகாஜனக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு. ரி. ஜே. ஜெயரத்தினம் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் பேசுவர்.

## இருநேரப் பாடசாலையாகும்

கொக்குவில், சனி

கொககுவில் ஸ்ரீ இராமகிருஷ்ண அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அடுத்த மாத ஆரம்பத்தில் இருநேரப் பாடசாலையாக இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிகிறது.

பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் ஏகமனதான தீர்மானத்துக்கு அமைய இம்முடிவை கல்விப் பகுதி எடுத்துள்ளதாகத் தெரிகிறது.

## முன்னாள் கவர்னர் ஜெனரல் சோல்பரிபிரபு காலமானர்

லண்டன். பெப். 6

**இலங்கைக்குச் சுதந்திரம்கிடைத்த பின்னர் முதல் கவர்னர் ஜெனரலாகவிருந்த சோல்பரி பிரபு தமது 83-வது வயதில் இன்று காலமானர்:**

சோல்பரி பிரபு சமீபகாலமாகவே நோய்வாய்ப்பட்டிருந்தார். சோல்பரி பிரபு உருவாக்கிய அரசியல் திட்டத்தின் அடிப்படையிலேயே இன்றைய நமது அரசியல்திட்டம் அமைந்துள்ளது.

இங்கிலாந்தில் ஆக்ஸ்ஃபேர்ட் பல்கலைக்கழகத்தில் பயின்ற சோல்பரி பிரபு 1936-ம் ஆண்டிலிருந்து 1941-ம் ஆண்டு வரை பிரிட்டிஷ் அமைச்சரவையில் ஓர் அமைச்சராக இருந்தார். ஆங்கிலேயர் சீர்திருத்த பணிகளில் அவர் தீவிரமாக ஈடுபட்டு வந்தார். 1949-ம் ஆண்டு முதற்கொண்டுஐந்து ஆண்டு காலம் அவர் இலங்கையில் கவர்னர்ஜெனரலாக இருந்து வந்தார்.

கவர்னர் ஜெனரல் பதவியிலிருந்து ஓய்வுபெற்றதும் [illegible] திரும்பிய அவர் பொதுப்பணிகளிலும் ஈடுபட்டுவந்தார்

## கவீப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 26 J 0463 | 18 E 0474 |
| 33 N 0305 | 33 C 0685 |
| 17 W 0362 | 05 X 0318 |
| 23 M 0097 | 24 U 0391 |
| 18 V 0224 | 07 W 0417 |
| 30 V 03?5 | 24 H 0195 |
| 19 S 0824 | 15 G 0649 |
| 15 Z 0823 | 14 W 0713 |
| 19 T 0373 | 18 K 0572 |
| 28 C 0921 | 09 S 0042 |
| 35 J 0453 | 08 V 0580 |
| 10 A 0356 | 22 A 0105 |
| 28 P 0457 | 38 O 0492 |
| 14 D 0183 | 29 Z 0209 |
| 35 N 0319 | 31 N 0206 |
| 30 Q 0807 | 30 B 0507 |
| 07 L 0095 | 34 W 0206 |
| 35 J 0682 | 19 U 0127 |
| 23 V 0577 | 02 Q 0047 |
| 22 E 0567 | 33 S 0912 |
| 10 K 0755 | 01 H 0889 |

(இவையாவும் உறுதிப் படுத்தப்படவேண்டும்)

## சமூககுறைபாடு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பித்த நவல்மசோதா இந்த அடிப்டையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆலயப்பிரவேசம் சம்பந்தமான பிரச்னைகள் சமூக குறைபாடு ஒழிப்புச் சட்டத்தை அமுல்நடாத்துவதற்கு கூடிய அதிகாரம் வழங்கும் வகையில் திருத்தப்படுவதன் மூலம் முற்றுப்புள்ளி வைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பாக். விமானங்கள் இலங்கையில் தங்கும் எரிபொருள் பெறவும் அனுமதி

கொழும்பு, சனி

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பாகிஸ்தான் விமானங்கள் தங்கி எரிபொருள் பெற்றுச் செல்வதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியிருக்கிறது.

இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் ஒன்று பாகிஸ்தானுக்குக்கடத்திச் செல்லப்பட்டு வெடிவைத்துக்கொளுத்தப்பட்டதைத் தொடர்ந்து இந்தியப் பிரதேசத்தின் மேலாகப் பாகிஸ்தான் விமானங்கள் பறக்கக்கூடாதென இந்திய அரசு தடைவிதித்துள்ளது இதன்காரணமாக இலங்கையில் பாகிஸ்தான் விமானங்கள் தங்கிச்செல்லவும் எரிபொருள் பெறவும் அனுமதி தருமாறு பாகிஸ்தான் அரசு இலங்கை அரசாங்கத்தைக் கேட்டிருந்தது

பாகிஸ்தான் விமானங்களிலிருந்து இலங்கையில் பிரயாணிகள் இறங்குவது ஏறுவது பற்றிய பிரச்னை இப்போது எழுவில்லை என்று இலங்கை விமானச் சேவை இலாகா அதிகாரியொருவர் தெரிவித்தார் (சி. பி ஏ.)

## ஜகஜீவன்ராம் காங்கிரஸ் போட்டியின்றி தெரிவு

கோழிக்கோடு. ஜன. 6

இந்திய லோகசபைத் தேர்தலில் லட்சதீவுத் தொகுதியில் ஜனப் சையத் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜகஜீவன்ராம் காங்கிரஸ் கட்சியில் போட்டியிட அபேட்சகராக முன்வந்த சையத்துடன் எவரும் போட்டியிட அபேட்சகர் மனு தாக்கல் செய்யாததால் இவர் மேற்படி தொகுதி அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

......

## மகா கும்பாபிஷேகம்

திருநெல்வேலி, ஞாயிறு

திருநெல்வேலி அரசடி சிவகாமசுந்தரி அம்மன் கோவில் சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம் நாளை காலைநடைபெறவிருக்கிறது.

இக் கும்பாபிஷேகத்தை யொட்டி விசேஷ ஆராதனைகளும் பூசைகளும் நடைபெறும். திருநெல்வேலி பிரம்ம ஸ்ரீ. நா. சண்முகரத்தினக் குருக்கள் இக் கும்பாபிஷேகத்தை நடத்தி வைக்கவுள்ளார்.

## புதிய அரசியல் திட்டத்தில் தமிழின் இடம்

பருத்தித்துறை. சனி

'புதிய அரசியல் திட்டத்தில் தமிழ்மொழி வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உத்தியோகமொழியாக்கப் படுவதுடன், பிற மாகாணங்களில் வாழும் தமிழர் தமிழ் மூலம் அரசாங்கத்துடன் தொடர்புகொள்ளும் உரிமையும்வழங்கப்படல்வேண்டும். போதனமொழி மாணவர்களின் தாய்மொழியாக இருக்கவேண்டுமென்பது, அடிப்படை உரிமைப்பட்டியலில் இடம்பெறல் வேண்டும். வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழ் நீதிமன்ற மொழியாக இருக்கும் அதே வேளையில் சிங்கள மொழி பெயர்பு வசதிகளும் செய்து வைக்கப்படல் வேண்டும். புதிய அரசியல் திட்டத்தில் 'ஸ்ரீலங்கா' என்னும் பதம் வருமிடங்களில் அதன் தமிழாக்கமாகிய 'இலங்கை'யும் இடம்பெறல்வேண்டும்'.


## மரண அறிவித்தல்

### செல்லையா சிவானந்தன்

ஓய்வுபெற்ற அரசாங்க தொழிற்சாலை உத்தியோகத்தரும், கௌரியம்மாவின் அருமைக் கணவரும், யாழ்ப்பாணம் இலங்கை வங்கி- மயிலானந்தனின் தந்தையும், புவனேஸ்வரியின் மாமனாரும், சிவசோதி, சண்முகம் ஆகியோரின் சகோதரரும்; ஜலஜா, பிரேமஜா, துஷியா, நகுலானந்தன, கிருபானந்தன், கோவர்தினி ஆகியோரின் பாட்டனுருமாகிய செல்லையா சிவானந்தன் காலமானர். அன்னாரின் பூதவுடல் இன்று (7-2-71) பிற்பகல் 4 மணியவில் ஈமைக்கிரியைகளுக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு. சிவப்பிரகாசம் வீதி, 20-ம் இலக்க இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும். 2456



## விற்பனைக்கு

கார்

தனி ஆள் பாவிப்பில் இருக்கும் போட் பிறிவெக்ற் EY 5275 விற்பனைக்குண்டு, விலை ரூபா 7000/- தொடர்பு கொள்ளவும் R. சந்தையா அன் சன், சாவகச்சேரி.

2810


இப் பத்திரிகை 'ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.